செய்தி வெளியீடு எண். 13-2017 நாள்: 07.03.2017

**விழுப்புரம் மாவட்டம் வருவாய்த்துறை சார்பாக 443 விவசாயிகளுக்கு ரூ.73,84,079/- மதிப்பீட்டில் வறட்சி நிவாரணம் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.**

*****

விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டம் கிளியனூர் ஜிஎன்ஜெ லட்சுமி சேஷ மஹாலில், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட வருவாய்த்துறை சார்பாக 443 நபர்களுக்கு ரூ.73,84,079/- மதிப்பீட்டில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (07.03.2017) வழங்கினார்.

மாவட்ட வருவாய்த்துறை சார்பாக 10 நபர்களுக்கு ரூ.1,80,599/- மதிப்பீட்டில் விவசாய வறட்சி நிவாரண உதவித்தொகையும், 281 பயனாளிகளுக்கு ரூ.72,03,480/- இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், 152 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும் என மொத்தம் 442 பயனாளிகளுக்கு ரூ.73,84,079/- மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (07.03.2017) வழங்கி விழாப்பேருரையாற்றினார்.

மாண்புமிகு மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு 2016-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி வருகிறது. 2016-ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை பொய்த்ததால் ஏற்பட்ட பயிர் சேதங்களை துல்லியமாக கணக்கிட்டு, பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் கிடைக்க உடனடியாக நடவடிக்கை எடுத்து, விவசாயிகளின் துயரை துடைக்கும் வகையில் மாநில அரசு பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணத் தொகை வழங்க நிதி ஒதுக்கீடு செய்து, வழங்கி வருகிறது.

விவசாயிகளின் பயிர் சேதங்களுக்கு மத்திய அரசிடம் நிவாரண தொகை வேண்டி, மாநில அரசு கோரிக்கை வைத்த போதிலும், மத்திய அரசிடமிருந்து எவ்வித நிவாரணமும் இந்நாள்வரை வழங்கப்படவில்லை. எனினும் தமிழ்நாடு அரசு 32 மாவட்ட விவவாயிகளும் நிவாரணம் கிடைக்கும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்து வழங்கி வருகிறது. அவ்வகையில், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் விவசாயிகள் பாதிக்கப்பட்டதாக கணக்கிடப்பட்டு, இவர்களுக்கு நிவாரண தொகையாக ரூ.84 கோடியே 34 லட்சம் நிவாரணத்தொகை தேவை என மாவட்ட நிர்வாகத்தால் கோரிக்கை வைக்கப்பட்டது. இத்தொகை முழுவதையும் வழங்க, அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இன்னும் ஓரிரு தினங்களில் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக